வண்ணாரப்பேட்டை, விம்கோநகர்

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் கொரோனா தடுப்பு கலைநிகழ்ச்சிகள்

## நாளை முதல் நடக்கிறது

சென்னை, பிப்.25–

மெட்ரோ ரெயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

கலைநிகழ்ச்சிகள்

மெட்ரோ ரெயிலில் பயணிக்கும் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஒரு பகுதியாக மெட்ரோ ரெயிலில் பயணம் செய்வது எவ்வளவு பாதுகாப்பானது என்பதை பயணிகளுக்கு தெரிவிக்கும் வகையில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் நிமிர்வு கலையகம் அமைப்புடன் இணைந்து பின்வரும் தேதிகளில் கலை நிகழ்ச்சிகளை நடத்த உள்ளது.

பறையாட்டம்

26–ந்தேதி (வெள்ளிக்கிழமை) மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையத்தில் பறையாட்டம் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

27–ந்தேதி (சனிக்கிழமை) மாலை 6.30 மணிமுதல் இரவு 8.30 மணி வரை சுங்கச்சாவடி மெட்ரோ ரெயில் நிலையத்தில் பறையாட்டம் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

28–ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை விம்கோநகர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் பறையாட்டம் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

சென்னை மாநகரில் வசிக்கும் மெட்ரோ ரெயில் பயணிகள் மற்றும் பொது மக்கள், மெட்ரோ ரெயில் நிலையங்களில் நடைபெறும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகளை கண்டு களித்து விழிப்புணர்வுடன் இருக்குமாறு சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.